<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>

<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>

<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>

**<u>MCOP.No319/2019.</u>**

பெயர் :– விமரேஷ் (P.W.–1)
த/பெ. :– காமராஜ்
தேதி :– 19.11.2025.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

நான் அனைத்து இன்சூரன்ஸ் கம்பெனிக்கும் இன்வெஸ்டிகேட்டராக பணிபுரிகிறேன் என்றால் சரிதான். நான் ஒரு இன்வெஸ்டிகேசன் நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர் ஆவேன். நான் B.Sc. Bio Tech படித்துள்ளேன். நான் எனது விசாரணை அறிக்கையை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு மருத்துவம் சார்ந்த துறையில் எனக்கு போதிய அனுபவம் கிடையாது என்றால் எனக்கு ஓரளவிற்கு தெரியும். ஒரு மருத்துவருக்கு தெரிந்த அளவு விபரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் எனது விசாரணையில் இவ்வழக்கில் இறந்துபோன கார்த்திக்கிற்கு சிகிச்சை அளித்த Chennai, Miot மருத்துவமனையில் உள்ள மருத்துவரையும்,. சென்னை காவேரி மருத்துவமனையில் உள்ள மருத்துவரையும், வேலூர் சிஎம்சி மருத்துவமனையில் உள்ள மருத்துவரையும் மற்றும் சென்னையில் உள்ள Cosh மருத்துவமனையில் உள்ள மருத்துவரையும் விசாரணை செய்து நான் எனது விசாரணை அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

மேற்கூறிய மருத்துவர்கள் அனைவரையும் விசாரணை செய்தால் தான் இறந்துபோன நபர் என்ன காரணங்களினால் இறந்துபோனார் என்ற விபரம் தெரியும் என்று சொன்னால் சரிதான், நான் எனது முதல் விசாரணையில் கார்த்திக்கு ஏற்பட்ட மரணம் இந்த விபத்தினால் ஏற்பட்ட மரணம் இல்லை என்றும், அது இயற்கையாக

ஏற்பட்ட மரணம் என்று குறிப்பிட்டுள்ளது நான் உத்தேசமாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். விபத்தில் இறந்த கார்த்திக் மாதம் ரூ.40,000/- சம்பளம் பெறவில்லை என்று கூறுவதற்கான எந்த ஆவணங்களையும் எனது விசாரணை அறிக்கையோடு நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் காப்பீடு நிறுவனத்திற்கு ஆதரவாக செயல்படவேண்டும் என்பதற்காக இந்த விசாரணை அறிக்கையை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.